பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**01 02 2026 SUNDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** ஏழை, நலிவடைந்த பிரிவினர் மற்றும் இளையோரின் மேம்பாட்டிற்கு மத்திய பட்ஜெட்டில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

**2)** தமிழகத்தின் வளர்ச்சிக்கான எண்ணற்றத் திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

**3)** மாநிலங்களுக்கான வரி பகிர்வு **41** சதவீதமாக தொடரும் என்ற அறிவிப்பு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

**4)** மத்திய பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள ஜவுளி மேம்பாட்டிற்கான திட்டங்கள் மூலம் தமிழகம் பயனடையும் என்று அஇஅதிமுக தெரிவித்துள்ளது.

**5)** சென்னையிலிருந்து ஹைதராபாத் மற்றும் பெங்களூரு நகரங்களை இணைக்கும் வகையில் அதிவேக ரயில் வழித்தடம் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை பிஜேபி வரவேற்றுள்ளது.

**-- இனி விரிவான செய்திகள் ---**

<<<<<<<>>>>>>

ஏழை, நலிவடைந்த பிரிவினர் மற்றும் இளையோரின் மேம்பாட்டிற்கு மத்திய பட்ஜெட்டில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்து அவர் உரையாற்றினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டும் வகையில் வரும் நிதியாண்டிலும் சீர்திருத்தங்கள் தொடரும் என்று அவர் கூறினார்.

உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம், எரிசக்தி பாதுகாப்பு, இறக்குமதி குறைப்பு போன்றவற்றுக்கு இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, 7 சதவீத வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறு-குறு தொழில் துறையின் மேம்பாட்டுக்காக 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நிதியம் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட செமி கண்டெக்டர் இயக்கம் செயல்படுத்தப்படும், கண்டெய்னர் உற்பத்திக்கான திட்டம்

அறிமுகப்படுத்தப்படும் என்றும் இதற்காக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

உயிரி மருந்து உற்பத்தியின் முனையமாக இந்தியாவை உருவாக்கும் வகையில் 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்படும்.

ஜவுளித்துறை மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும்

காதி மற்றும் கைத்தறி துறையை வலுப்படுத்தும் வகையில் மகாத்மா காந்தி கிராம சுயராஜ் திட்டம் செயல்படுத்தப்படும்.

நாடுமுழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் விடுதிகள் ஏற்படுத்தப்படும்.

மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி நிதியத்திற்கான ஒதுக்கீடு 40 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டும் நோக்கில் வங்கித்துறையில் ஒருங்கிணைந்த சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கென உயர்நிலைக் குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படும்.

மூன்று அகில இந்திய ஆயுர்வேத மையங்கள் ஏற்படுத்தப்படும்.

நாடுமுழுவதும் 15 ஆயிரம் பள்ளிகள் மற்றும் 500 கல்லூரிகளில் ஏ.வி.ஜி.சி ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும்.

மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டுக்கு இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மீன்வளத் துறையை வலுப்படுத்தும் நோக்கில் 500 நீர் தேக்கங்கள் மற்றும் நீர்நிலைகள் மேம்படுத்தப்படும்.

மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்தும் நோக்கில் விற்பனை மையங்கள் ஏற்படுத்தப்படும்.

மாவட்ட மருத்துவமனைகளில் அவசர கால சிகிச்சைப் பிரிவுக்கான கட்டமைப்பு வசதிகள் 50 சதவீதம் மேம்படுத்தப்படும்.

தமிழகம், ஒடிசா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் அரிய வகை கனிமங்கள் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் வகையில் சிறப்பு வழித்தடங்கள் ஏற்படுத்தப்படும்.

தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் உட்பட 15 அகழ்வாராய்ச்சி மையங்கள் மேம்படுத்தப்படும்.

பழவேற்காடு ஏரியில் பறவைகளை காண பிரத்யேக காட்சி மையம், பொதிகை மலையில் மலையேற்றத்தை ஊக்குவிக்கும் திட்டம்

என்பன உள்ளிட்ட தமிழகத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களும் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

சென்னையில் இருந்து ஹைதராபாத் மற்றும் பெங்களூருவுக்கு அதிவேக ரயில் வழித்தடங்கள் ஏற்படுத்தப்படும் போன்ற அறிவிப்புகளையும் நிதியமைச்சர் வெளியிட்டார்.

புதிய வருமான வரிச்சட்டம் வரும் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்று கூறிய அவர், புற்றுநோய் சிகிச்சைக்கான 17 மருந்துகளுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்படும் என்றார்.

7 அரிய வகை நோய் சிகிச்சைக்கான மருந்துகளுக்கும் இது பொருந்தும் என்றும் அவர் கூறினார்.

வாகன விபத்து இழப்பீட்டு தொகைக்கு விதிக்கப்படும் வரி ரத்து செய்யப்படுவதாகவும் அவர் அறிவித்தார்.

16 ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பதாகவும், மாநிலங்களுக்கான வரி பகிர்வு 41 சதவீதமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த பட்ஜெட்டில் அதிகபட்சமாக போக்குவரத்துத் துறைக்கு 5 லட்சத்து 98 ஆயிரத்து 520 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பாதுகாப்புத் துறைக்கு 5 லட்சத்து 94 ஆயிரத்து 585 கோடி ரூபாயும், ஊரக வளர்ச்சித் துறைக்கு 2 லட்சத்து 73 ஆயிரத்து 108 கோடி ரூபாயும், வேளாண் துறைக்கு 1 லட்சத்து 62 ஆயிரத்து 671 கோடி ரூபாயும், சுகாதாரத் துறைக்கு 1 லட்சத்து 4 ஆயிரத்து 599 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை நான்கு புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்றும், வரும் நிதியாண்டில் இது நான்கு புள்ளி மூன்று சதவீதமாக குறையும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

நிதியமைச்சரின் பட்ஜெட் உரையை தொடர்ந்து மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் மாநிலங்களவையில் மத்திய பட்ஜெட்டை திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து மாநிலங்களவை நடவடிக்கைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

<<<<<<<>>>>>>>

மத்திய பட்ஜெட்டை வரவேற்றும், குறை கூறியும் பல்வேறு தலைவர்களும், அமைப்புகளும் கருத்து தெரிவித்துள்ளன.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான அனைத்து அம்சங்களும் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள காணொலி பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

***(Sound Byte — மோடி - 60 Sec. )***

மத்திய பட்ஜெட்டில் ரயில்வேத்துறைக்கு 2 லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதன்மூலம், நவீனமயமாக்கல் மற்றும் பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் வேகம் பெறும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கான எண்ணற்றத் திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மூலதன செலவு பத்து சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பது கட்டமைப்பை

மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கைத்தறித்துறையின் வளர்ச்சிக்கான மகாத்மா காந்தி கிராம சுயராஜ் திட்டம் தமிழகத்திற்கு பயன் அளிக்கும் என்றும் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான லட்சியத்தை எட்டுவதற்கான உறுதியான பாதையை வகுக்கும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மாநிலங்களுக்கான வரி பகிர்வு **41** சதவீதமாக தொடரும் என்ற அறிவிப்பு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரதமரின் ஊரக வீட்டுவசதி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சிறு-குறு தொழில் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜவுளி மேம்பாட்டிற்கான திட்டங்கள் மூலம் திருப்பூர் மற்றும் கரூர் பகுதியை சேர்ந்தவர்கள் பயனடைவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையிலிருந்து ஹைதராபாத் மற்றும் பெங்களூரு நகரங்களை இணைக்கும் வகையில் அதிவேக ரயில் வழித்தடம் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதற்காக, தமிழக மக்கள் சார்பில் மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய பட்ஜெட்டில் மூலதன செலவினங்களுக்கான ஒதுக்கீடு 12 லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று பாமக கூறியுள்ளது.

மாநிலங்களுக்கான நிதி பகிர்வு அதிகரிக்கப்படவில்லை என்றும், வேளாண் வளர்ச்சிக்கான திட்டங்கள் இதில் இடம்பெறவில்லை என்றும் இந்த பட்ஜெட் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

சென்னையிலிருந்து, ஹைதராபாத் மற்றும் பெங்களூருவுக்கு அதிவேக ரயில் பாதை அமைக்கும் திட்டம் வரவேற்கத்தக்கது என்றும் இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் என்றும் தேமுதிக கூறியுள்ளது.

பழவேற்காடு ஏரியில் பறவைகளை காண பிரத்யேக காட்சி மையம், பொதிகை மலையில் மலையேற்றத்தை ஊக்குவிக்கும் திட்டம் என்பன உள்ளிட்ட தமிழகத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்கள் இதில் இடம்பெறிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அமமுக தெரிவித்துள்ளது.

தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை கூறியுள்ளது.

மாவட்டந்தோறும் மகளிர் விடுதிகள் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பும், இறக்குமதி குறைப்பதற்கான நடவடிக்கையும் வரவேற்கத்தக்கது என்று சேலத்தை சேர்ந்தவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***(Sound Byte — சேலம் — 60 Sec. )***

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வார விடுமுறை நாளான இன்று குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர்.

--------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் **2** பெண்கள் உயிரிழந்தனர்.

---------------------

நெல்லை மாவட்டம் திருப்புடைமருதூரில் உள்ள நாறும்பூநாதர் கோவிலில் தைபூச தீர்த்தவாரி திருவிழா வெகு விமரிசையாக இன்று நடைபெற்றது.

<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**Bulawayo** -வில் இன்று நடைபெற்ற சூப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் இந்தியா **58** ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா **49** புள்ளி ஐந்து ஓவரில் **252** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக வேதாந்த் திரிவேதி **68** ரன் எடுத்தார்.

**253** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் பேட் செய்த பாகிஸ்தான் **46** புள்ளி இரண்டு ஓவரில் **194** ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

---------------

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தேவிகா சிகாக் பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **21-8, 6-3** என்ற செட் கணக்கில் முன்னிலையில் இருந்தபோது, மலேசியாவின் **Goh Jin Wi** காயம் காரணமாக போட்டியிலிருந்து பாதியிலேயே வெளியேறினார். இதனையடுத்து தேவிகா சிகாக் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

---------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **11-9, 11-3, 9-11, 11-5** என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Sabrina Sobhy** -ஐ வென்றார்.

**<<<<<<<END>>>>>>**